# <u>ADM COURT, SANKARANKOVIL</u>

**தேதி 19.01.2026**

**அசல் வழக்கு எண். 347/2014**

**<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் முதல்விசாரணை தொடர்ச்சி</u>**

நான் ஏற்கனவே இவ்வழக்கில் வா.சா.1 ஆக எனது முதன்மை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து எனது தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. தற்போது

1. 24.09.1967 தேதியிட்ட ராமகிருஷ்ணசாமி என்பவர் குறிஞ்சாகுளம் கம்மவார் சமுதாயத்திற்கு அதன் அப்போதைய தலைவர் வெங்கடசாமி என்பவருக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. பட்டா எண்.454 க்கான பட்டா தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** 07.07.2014 தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய ஆட்சேபனை அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** 08.07.2014 தேதியிட்ட வாதியின் அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

**5.** 19.08.2014 தேதியிட்ட வாதி தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 ன் படி 1ம்பிரதிவாதிக்கு அனுப்பிய மனு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** 17.09.2014 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய கடிதக்குறிப்பு அஞ்சல் உறையுடன் கூடிய அசல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

**7.** 24.09.2014 தேதியிட்ட பிராதின் தபசில் சொத்திற்கான 01.06.2003 முதல் 23.09.2014 வரையிலான 12 வருடங்களுக்குரிய வில்லங்கசான்றிதழ் (எண்.5790/2014) தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

**வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**